DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.43/2025**

Deposition of witness for Prosecution அ.சா.1

Name : செந்தாமரைக்கண்ணன்
Father/ Husband Name : தியாகராஜன்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 24.11.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது திருவேகம்பத்துார் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு முதல் நிலைக் காவலராக பணியில் இருந்த போது 20.10.2024-ம் தேதி காலை 09.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.கலைச்செல்வம் அவர்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் சுமார் 09.25 மணிக்கு ரோந்து அலுவல் தொடர்பாக நானும், போலீஸ் பார்ட்டி சகிதம் தச்சவயல் பாலம் அருகே மதுபாட்டில் விற்பனை நடப்பதாக தகவல் கிடைத்ததின் பேரில் அங்கு சென்ற போது எதிரி கருப்பசாமி அங்கு நின்று கொண்டிருந்தார். அவரை சோதனை செய்த போது அவரிடம் மூடிகள் திறக்கப்படாத 180 ml அளவு கொண்ட 27 Express அரசு பிராந்தி பாட்டில்கள் இருந்தது. அவைகளை சார்பு ஆய்வாளர் கலைச்செல்வம் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். **(மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரியையும், கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களையும் காவல் நிலையம் கொண்டுவந்து எதிரியையும், மதுபாட்டில்களையும் எதிரியை காவல் நிலைய பிணையில் சார்பு ஆய்வாளர் விடுவித்தார். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. 27 மதுபாட்டில்கள் இருந்தால் தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். பொதுவாக குடியரசு தினம், சுதந்திர தினம் போன்ற நாட்களில் மதுபான வழக்குகள் இத்தனை வழக்குகள் தாக்கல் செய்ய வேண்டும் என்று இலக்கு உள்ளது என்றால் தெரியும். நானும், காவலரும் தனித்தனி வாகனத்தீல் அல்லது ஒரே வாகனத்தில் சென்றோமா என்றால் தனித்தனி வாகனத்தில் சென்றோம். மொத்தம் 2 வாகனங்களில் சென்றோம். கைப்பற்றுதல் மகஜரை யார் எழுதியது என்றால் தெரியாது, எனக்கு அடுத்த பணி சொன்னதால் நான் கிளம்பி விட்டேன். தச்சவயல் பாலம் என்பது ஆள்நடமாட்டம் உள்ள குடியிருப்பு பகுதியா என்றால் குடியிருப்பு பகுதி இல்லை, நாங்கள் சென்ற போது ஆள்நடமாட்டம் இல்லை. தச்சவயல் பாலத்திலிருந்து 20 மீ தூரத்தில் குடியிருப்பு பகுதிகள் நிறைந்த தச்சவயல் கிராமம் உள்ளது என்றால் சரிதான். எதிரியை சார்பு ஆய்வாளரின் வாகனத்தில் அழைத்து வந்தோம். நான் சொல்வது போல் எதிரி எந்த விதமான மதுபானங்களை விற்க வில்லை என்றும் சுதந்திர தினத்தன்று மதுவழக்கு சம்பந்தமான வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் நோக்கில் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி மதுபான கடையில் வேலை செய்கிறாரா என்றால் தெரியாது.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.